TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8102109

1. District : சிவகங்கை
மாவட்டம்
PS: ஊ.த.க பிரிவு சிவகங்கை
காவல்நிலையம்
Year: 2022
ஆண்டு
FIR No.: 10/2022
மு.த.அ. எண்
Date: 31.10.2022
நாள்

2. (i) Act சட்டம்: PC Act 1988 — Sections பிரிவுகள்: 7 of PC Act 1988 as amended
(ii) Act சட்டம்: — Sections பிரிவுகள்: by the PC (Amendment)
(iii) Act சட்டம்: — Sections பிரிவுகள்: Act 2018
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day :
குற்ற நிகழ்வு நாள்
Date from : 28.10.2022
நாள் முதல்
Date to : 31.10.2022
நாள் வரை

Time Period :
நேர அளவு
Time from :
நேரம் முதல்
Time to :
நேரம் வரை

(b) Information Received at PS. Date : 31.10.2022
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள்
Time : 09.30 hrs
நேரம்

(c) General Diary Reference : Entry No(s)
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண்
Time : 10.00 hrs
நேரம்

4. Type of Information : Written/ Oral :
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக — எழுத்து மூலமாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: – 55 கி.மீ வடகிழக்கு, காரைக்குடி
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும் நகராட்சி அலுவலகம்.

Beat Number :
முறைக் காவல் எண்
(b) Address :
முகவரி

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர்
District :
மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : திவ்யநாதன்
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர்
(b) Father's/ Husband's Name : ஜேம்ஸ்
தந்தை / கணவர் பெயர்

(c) Date / Year of Birth : 22/2022
நாள் / பிறந்த ஆண்டு
(d) Nationality : இந்தியன்
நாட்டினம்
(e) Passport No. :
வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue :
வழங்கப்பட்ட நாள்
Place of Issue :
வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : சுய தொழில்
தொழில்
(g) Address : கதவு எண்.2/2, வைரவன் தெரு, கழனிவாசல்,
முகவரி காரைக்குடி, காரைக்குடி வட்டம், சிவகங்கை மாவட்டம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

**திரு.சரவணன், வட்ட துணை நில அளவையர், காரைக்குடி நகராட்சி, சிவகங்கை மாவட்டம்.**

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

**No Delay**

* GCP 240-34(Type 2) 90.000 Cps -21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து சமர்பிக்கிறேன்:- இன்று 31.10.2022-ம் தேதி காலை 09.30 மணிக்கு காவல் ஆய்வாளர் R.ஜேசுதாஸ் ஆகிய நான் நிலைய பொறுப்பில் இருந்தபோது, திரு.திவ்யதர்சன், த/பெ.S.ரமேஷ், க.எண்.2/2, வைரவன்தெரு, கழனிவாசல், காரைக்குடி, காரைக்குடி வட்டம், சிவகங்கை மாவட்டம் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று, இரகசிய விசாரணை செய்தும், புகார்தாரர் மற்றும் குற்றம் சுமத்தப்பட்ட சிவகங்கை மாவட்டம், காரைக்குடி நகராட்சி, வட்ட துணை நில அளவையராக பணிபுரியும் திரு.சரவணன் என்பவர் பற்றி ரகசிய விசாரணை மேற்கொண்டு, அவரின் நடத்தைகளை அறிந்தும், புகார் மனுவில் ஊழல் தடுப்பு சட்டத்தின்படி நடவடிக்கை எடுக்க முகாந்திரம் இருந்த காரணத்தினால் அந்த தகவலை சென்னை, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, தென்சரக காவல் கண்காணிப்பாளர் அவர்களுக்கு,

**(தனித்தாள் இணைக்கப்பட்டுள்ளது)**

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS...............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ........................... பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு R.K. [signature]

Signature of the Officer in-charge, Police Station [signature] 31/10/2022
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
31.10.2022 at 11.00 hrs

Name: பெயர் R. ஜேசுதாஸ்,
Rank: நிலை ....................No. எண் ..........
காவல் ஆய்வாளர்,
ஊ.த.க பிரிவு
சிவகங்கை.

* GCP-240-34(Type-2) 90,000 Cps -21.3.16(HCL-12)p 2

தொலைபேசி மூலம் தகவல் தெரிவித்து, பின் அன்னாரின் அனுமதி பெற்று 31.10.2022 ஆம் தேதி காலை 10.00 மணிக்கு, சிவகங்கை, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு குற்ற எண்.10/2022, U/s 7 of Prevention of Corruption Act 1988 as amended by the PC (Amendment) Act 2018-ன்படி வழக்குப் பதிவு செய்தேன். புகார் மனுவின் விபரம் பின்வருமாறு:- அனுப்புனர்:- திவ்யதர்சன், த/பெ.S.ரமேஷ், க.எண்.2/2, வைரவன்தெரு, கழனிவாசல், காரைக்குடி, காரைக்குடி வட்டம், சிவகங்கை மாவட்டம். 630002. பெறுநர், காவல் ஆய்வாளர் அவர்கள், லஞ்ச ஒழிப்புத் துறை, சிவகங்கை. அய்யா, நான் மேற்கண்ட முகவரியில் எனது அப்பா அம்மாவுடன் குடியிருந்து வருகிறேன். சிவகங்கை மாவட்டம், காரைக்குடி வட்டம், காரைக்குடி டவுன், வார்டு-2, பிளாக்-2, கழனிவாசல் வைரவன் தெருவில் பழைய சர்வே எண்.57, Part-க்கு கீழ்புறம் 115 சதுர மீட்டர் உள்ளதுக்கு 1238 சதுர அடி உள்ள மனையிடத்தை பொன்னையா அவர்களின் மகளும், கணேசன் அவர்களின் மனைவியுமான திருமதி.செந்தாமரை என்பவரிடம் இருந்து, எனது அம்மா கவிதாவின் பெயருக்கு 30.04.2021-ம் தேதியன்று காரைக்குடி, எண்.2நிர் சார்பதிவக ஆவண எண்.3191/2021-ன்படி கிரையம் பெறப்பட்டது. இந்நிலையில் 26.10.2022-ம் தேதியன்று, இ-சேவை மையத்திற்கு சென்று எனது அம்மாவின் பெயரில் பட்டா மாறுதல் செய்யவேண்டி, காரைக்குடி வட்டாட்சியருக்கு, Online மூலம் விண்ணப்ப எண்.2022/0153/23/001992-ன்படி விண்ணப்பம் செய்தேன். அதன்பின், இது சம்பந்தமாக சிவகங்கை மாவட்டம், காரைக்குடி நகராட்சியில் வட்ட துணை நில அளவையராக பணிபுரியும் திரு.சரவணன் என்பவரை 28.10.2022-ம் தேதி சுமார் 11.15 மணியளவில், காரைக்குடி நகராட்சி அலுவலகத்திற்கு நேரில் சென்று சந்தித்து, எனது அம்மாவின் பெயரில் பதிவு செய்யப்பட்ட மேற்படி கிரைய ஆவண நகல் மற்றும் அது தொடர்புடைய பிற ஆவணங்களின் நகல்களை கொடுத்து, பட்டா மாறுதல் சம்பந்தமாக விபரம் கேட்டேன். அதற்கு சரவணன் நான் கொடுத்த ஆவணங்களை சரிபார்த்துவிட்டு, ஆவணங்கள் அனைத்தும் சரியாக உள்ளது என்று கூறி, எனது அம்மாவின் பெயருக்கு பட்டா மாறுதல்

செய்து கொடுப்பதற்கான அனைத்து வேலைகளையும் தானே செய்து தருகிறேன் என்றும், அதற்கு ரூ.7,000/-ம் செலவாகும் என்று கூறினார். அதற்கு நான், அரசாங்கத்திற்கு செலுத்த வேண்டிய தொகையை செலுத்திவிட்டேனே என்று கூறி, அப்புறம் எதற்கு ரூ.7000/-ம் என்று கேட்டேன். அதற்கு சரவணன் இது வேறு, அது வேறு என்று என்னிடம் சொன்னார். மேலும் எல்லாரிடமும் வாங்குவது வழக்கம்தான் என்று கூறி, உனக்காக வேண்டுமானால் ரூ.1000/- குறைத்துக்கொள்கிறேன் என்று சொல்லி ரூ.6,000/-த்தை கொடுக்குமாறு என்னிடம் கேட்டார். மேலும் ரூ.6,000/-ம் கொடுத்தால் மட்டுமே பட்டா மாறுதல் செய்து தரமுடியும் என்று கண்டிப்பாக கூறிவிட்டார். எனக்கு பணம் கொடுக்க விருப்பம் இல்லாததால், பிறகு வந்து சந்திப்பதாக கூறி, அங்கிருந்து வந்துவிட்டேன். மேலும், வட்ட துணை நில அளவையர் சரவணன் அவர்களுக்கு ரூ.6,000/-ம் லஞ்சம் கொடுக்க எனக்கு விருப்பம் இல்லை. எனவே அவர் லஞ்சமாக கேட்ட பணம் ரூ.6,000/-த்தை கொண்டு வந்துள்ளேன். என்னிடம் லஞ்சம் கேட்ட சிவகங்கை மாவட்டம், காரைக்குடி நகராட்சி, வட்ட துணை நில அளவையர் சரவணன் மீது தக்க நடவடிக்கை எடுக்கமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன். மேலும் இத்துடன் எனது அம்மா கவிதாவின் பெயரில் பதிவு செய்யப்பட்ட கிரைய பத்திர ஆவண எண்.3191/2021-ன் நகல் மற்றும் பட்டா மாறுதல் சம்பந்தமான ஆண்லைன் விண்ணப்ப எண்.2022/0153/23/001992-ன் நகல் ஆகியவற்றை இணைத்துள்ளேன். இப்படிக்கு, (ஒப்பம்) திவ்யதர்சன் 31.10.2022.

Sir, Received the complaint on 31.10.2022 at 09.30 hrs the genuineness of the complainant was verified through sources and found to be genuine. The integrity and antecedents of the accused was also verified through sources and found bad. Found Prima-facie for the allegation of the complainant. Since the registration of regular case is warranted, the matter is intimated to the SP/SR, V&AC, Chennai and registered a case in Sivagangai, Vigilance and Anti-Corruption Unit Crime No.10/2022, U/s 7 of Prevention of Corruption Act 1988 as

amended by the PC (Amendment) Act 2018 on 31.10.2022 at 10.00 hrs and took up for Investigation. (Sd) R.Jesudoss 31.10.2022 Inspector of Police, Vigilance and Anti-Corruption, Sivagangai Detachment.

The Original FIR along with original complaint is submitted to the Hon'ble Special Judge for PC Act cases, Sivagangai and the copies submitted to the concerned officers.

31/10/2022
காவல் ஆய்வாளர்
[illegible]
சிவகங்கை.